# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்*

---

*(2008 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2008, பெப்புருவரி மாதம் 29 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## *2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க,* செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்

*[2008 ஆம் ஆண்டு பெப்புருவரி 29 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]*

*ச.வ.ஓ. 05/2008*

**செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்களை மேம்படுத்து வதற்கும் ; இனங்காணப்பட்ட செயல்நுணுக்க அபிவிருத்தி கருத்திட்டங்கள் தொடர்பில் வரியில்லா காலமொன்றை ஏற்பாடு செய்வதற்கும் ; அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப் பெயர்.*

***1***. இச்சட்டம் 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*சட்டத்தின் குறிக்கோள்.*

***2***. இச்சட்டம் நடைமுறைக்குவரும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும், இதன்கண் அடங்கியுள்ள பின்வரும் ஏற்பாடுகளுக் கிணங்க இச்சட்டத்தின் நோக்கங்களுக்கு செயல்நுணுக்க அபிவிருத் திக் கருத்திட்டங்களாக இனங்காணப்படும் எந்த குறித்த சில கருத்திட்டங்களுக்கு இச்சட்டத்தின் அட்டவணையில் குறித்துரைக் கப்பட்ட சட்டவாக்கங்களின் ஏற்பாடுகளின் ஏற்புடைமையிலிருந்து விலக்களிப்புகள் காலத்திற்குக் காலம் அளிக்கப்படக்கூடுமோ அக்கருத்திட்டங்களாக இருத்தல் வேண்டும் :

ஆயின், இப்பிரிவின் நியதிகளில் வழங்கப்பட்ட ஏதேனும் விலக்களிப்புக் காலப்பகுதியானது எச்சந்தர்ப்பத்திலும் இருபத் தைந்துஆண்டு காலப்பகுதியொன்றை விஞ்சுதலாகாது.

*செயல் நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்களை இனங்காணல்.*

***3***. (1) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபை சட்டத்தினால் தாபிக் கப்பட்ட இலங்கை முதலீட்டுச் சபை, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டமொன்றாக ஏதேனும் உத்தேசிக்கப்பட்ட கருத்திட்டத்தை இயைபான செயற்பாட்டு அமைச்சுகளுடனான கலந்தாலோசனை யுடன் இனங்காணல் வேண்டும்.

2-PL 002789-1400 (2008/02)

(2) செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டமொன்றாக (1) ஆம் உட்பிரிவின் நியதிகளில் இனங்காணப்பட்டுள்ள கருத்திட்ட மொன்றின்மீது, முதலீடு என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் உத்தேசிக்கப்பட்ட கருத்திட்டங்கள் ஒவ்வொன்று தொடர்பிலும் மற்றும் அது சம்பந்தமாக அளிக்கப்படவுள்ள விலக்களிப்புகள் தொடர்பிலும் இயைபான தகவலை வர்த்தமானி யில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் வெளியிடுதல் வேண்டும்.

(3) முதலீடு என்னும் விடயம் குறித்தொதுக்கப்படுகின்ற அமைச்சர், (2) ஆம் உட்பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தல் தேதியிலிருந்து முப்பது நாட்கள் காலப்பகுதியொன்று முடிவடைந் ததன்மீது நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச் சரின் கலந்தாலோசனையுடன் –

(அ) செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டமொன்றாக அத்தகைய கருத்திட்டத்தை கருதுவதற்கான அடிப்படை நியாயத்தை ; அத்துடன்

(ஆ) அளிக்கப்பட உத்தேசிக்கப்பட்ட விலக்களிப்பு காலப் பகுதி என்பவற்றை அமைச்சரவைக்கு அறிவிப்பதற்கு அவசிமாகின்றவாறான அத்தகைய நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டுமென்பதுடன்,

செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டமொன்றாகக் கருத் திட்டத்தை அடையாளம் காணல் மற்றும் 2 ஆம் பிரிவின் நியதிகளின்படி அத்தகைய கருத்திட்டத்திற்கு அளிக்கப்படவுள்ள விலக்களிப்புகளுக்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தையும் பெறுதல் வேண்டும்.

(4) செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டமொன்றாக கருதப் படவேண்டிய அத்தகைய கருத்திட்டத்திற்காகவும் 2 ஆம் பிரிவின் நியதிகளின்படி அத்தகைய கருத்திட்டத்திற்கு அளிக்கப்படவுள்ள மேற்சொல்லப்பட்ட விலக்களிப்புகளுக்கும் அமைச்சரவை அங்கீ காரத்தை வழங்கினால் முதலீடு என்னும் விடயத்திற்குப் பொறுப் பான அமைச்சர், எத்தேதியில் அமைச்சரவையின் அங்கீகாரம் அளிக்கப்படுகின்றதோ அத்தேதியிலிருந்து ஆறு வாரத்தினுள், செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டத்தின் பெயர், அத்தகைய கருத்திட்டம் தொடங்கும் தேதி மற்றும் எத்தேதி இதற்கான

அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சட்டவாக்கங்களிலிருந்து 2 ஆம் பிரிவின் நியதிகளின்படி அளிக்கப்பட்ட விலக்களிப்புகள் செயற்பாட்டுக்கு வருமோ அத்தேதியையும் அவை எத்தேதியில் ஒழிக்கப்படுமோ அத்தேதியையும் குறித்து அறிவிப்பொன்றை உடனடியாக வர்த்தமானியில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.

(5) நாலாம் உட்பிரிவின் நியதிகளுக்கிணங்க ஆக்கப்படும் கட்டளை ஒவ்வொன்றும் வர்த்தமானியில் கட்டளை வெளியீட்டுத் தேதியிலிருந்து மூன்று மாதங்களினுள் பாராளுமன்றம் முன் இடப்படுதல் வேண்டும்.

*கட்டளை நடைமுறைக்கு வருவதற்கான நடவடிக்கை முறை.*

**4**. மூன்றாம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் கட்டளை ஒவ்வொன்றும் -

(அ) பாராளுமன்றத்தின் தீர்மானத்திலான அங்கீகாரத்தின் மேல் உடனடியாக செயற்பாடுடையதாக வருதலாதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படவில்லையாயின், அதன்கீழ் ஏதேனும் முன்னதாக செய்யப்பட்டவற்றுக்குப் பங்கமின்றி அத்தகைய தீர்மானித்தேதியிலிருந்து பயனுறுவதாக இரத்துச் செய்யப்பட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பொருள் கோடல்.*

**6**. சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி, "செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம்" என்பது, தேசிய அக்கறை உள்ளதும் நாட்டிற்கு பொருளாதார மற்றும் சமூக நலன்களைக் கொண்டுவரும் சாத்தியமுள்ளதும் முதன்மையாக -

(அ) பொதுமக்களுக்கு நன்மையளிக்கும் உத்தேசிக்கப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்கலிற்கு இணைக்கப்பட்ட செயல்நுணுக்க முக்கியத்துவம் ;

(ஆ) நாட்டிற்கு அந்நியநாட்டு செலாவணியின் கணிசமான உள்வருகை ;

(இ) உருவாக்கப்படும் கணிசமான தொழில் மற்றும் வருமானம் சம்பாதிக்கும் சந்தர்ப்பங்களை உயர்த்தப்படுதல் ; அத்துடன்

(ஈ) தொழில்நுட்ப ரீதியிலான மாற்றங்களை எதிர் நோக்குதல்,

என்பன மூலம் நாட்டின் நிலவடிவமைப்பை மாற்றும் சாத்தியத்தை உடையதுமான கருத்திட்டமொன்று எனப் பொருள்படும்.

**அட்டவணை** **(பிரிவு 2)**

1. 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம்.
2. 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டம்.
3. 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம்.
4. 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச் சட்டம்.
5. 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்.
6. 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதார சேவை விதிப்பனவுச் சட்டம்.
7. 2002 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பற்றுக்கள் வரிச் சட்டம்.
8. (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டம்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்